கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
முதலாம் வருட கலைமாணித் தேர்வு 2010/2011
(யூன் 2013) (வெளிவாரி)

LIBRARY EASTERN UNIVERSITY, SRI LANKA
23 AUG 2013

# PHY 101 மெய்யியற் பிரச்சினைகள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இரு வினாக்களையும் பகுதி – II இல் மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி – I

01. (அ) எடுப்பு முரண்பாட்டு அனுமானத்திலுள்ள பல்வேறு முரண்பாட்டுத் தொடர்புகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) உண்மையில்லாதனவற்றை உறுதி செய்வது தொடர்பாக பாரம்பரிய முரண்பாட்டுச் சதுரத்தில் எழும் பிரச்சினைகளை ஆராய்க.

(08 புள்ளிகள்)

02. கீழ்வரும் நியாயத் தொடைகள் வலிதானவையா வலிதற்றவையா என்பதை தீர்மானிக்குக. வலிதற்றதாயின் மீறப்பட்டுள்ள விதியைகூறி நிகழ்ந்துள்ள போலியின் பெயரையும் தருக.

(i) (அ) மலர்கள் மட்டுமே அழகானவை. அழகானவை யாவும் விலைகூடியவை. எனவே விலைகூடியவை பலவும் மலர்களாகும்.

(ஆ) நாயும் பூனையும் மாமிசம் உண்பவை யாதலால் எல்லா நாய்களும் பூனைகள் ஆகும்.

(5x2=10 புள்ளிகள்)

(ii) வலிதான நியாயத் தொடை ஒன்றில் ஒரு எடுகூற்று மாத்திரம் குறையெடுப்பாயின் முடிவும் குறையெடுப்பாக இருப்பது ஏன்? நியாயத் தொடையின் பிரதான விதிகளைக் கூறி விளக்குக.

(10 புள்ளிகள்)

03.(அ) வகுப்பளவையியலை (வெண்வரைபடம்) அடிப்படையாகக் கொண்டு "இறக்குமதி செய்யப்படுபவை அனைத்தும் உள்நாட்டு உற்பத்திகள் அல்ல" என்பது உமக்குத் தரப்படுமாயின் கீழ்வரும் அனுமானங்கள் வலிதானவையா? அல்லது வலிதற்றவையா? எனக்கூறுக.

(i) இறக்குமதி செய்யப்படுபவை உள்ளன.

(ii) உள்நாட்டு உற்பத்தியில்லாத இறக்குமதி செய்யப்படுபவை இருக்கின்றன.

(iii) இறக்குமதி செய்யப்படுபவை சில உள்நாட்டு உற்பத்திகளாகும்.

(iv) உள்நாட்டு உற்பத்திகள் இல்லை

(2.5x4=10 புள்ளிகள்)

(ஆ) கீழ்வரும் வாதங்களை வகுப்புக்களின் அடிப்படையில் குறியீட்டில் தந்து வெண்வரைபடத்தின்மூலம் அவற்றின் வாய்ப்பினைத் துணிக.

(i) அன்னங்கள் அழகானவை. எல்லா அழகானவையும் குறைவாக இருப்பதுடன் அன்னங்கள் குறைவாக இருப்பதுமே காரணமாகும்.

(ii) குழந்தைகள் மட்டுமே வினோதங்களை விரும்புவதுடன் வினோதங்களை விரும்புபவர்கள் மாத்திரமே சுகதேகிகளாவார்கள். ஆகவே குழந்தைகள் சுகதேகிகள்

(5x2=10 புள்ளிகள்)

04. பின்வரும் தேற்றங்களை நிறுவுக.

(i) $(P \vee \sim P)$

(ii) $[(Q \vee P) \rightarrow (P \vee Q)]$

(iii) $[\sim(P \vee Q) \leftrightarrow (\sim P \wedge \sim Q)]$

(iv) $(P \rightarrow Q) \leftrightarrow \sim (P \wedge \sim Q)$

(5x4= 20 புள்ளிகள்)

## பகுதி – II

05. மெய்யியலின் செல்நெறிப் போக்கினை மெய்யியல் வரலாற்றுக் காலகட்டங்களை அடிப்படையாக வைத்து விளக்குக.

(20 புள்ளிகள்)

06. "சட்டத்தை மீறுவது குற்றம். குற்றத்திற்கு அளிக்கப்படுவது தண்டனை" தண்டனை பற்றிய கொள்கைகளைக் குறிப்பிட்டு அவற்றின் ஏற்புடைமை பற்றியும் ஆராய்க.

(20 புள்ளிகள்)

07. கடவுள் இருப்புத் தொடர்பான பின்வரும் ஆஸ்தீக் இறையிருப்பு நிரூபணங்களை விளக்குக.

(i) உள்பொருளிய வாதம் (10 புள்ளிகள்)

(ii) பிரபஞ்ச வியல்வாதம் (10 புள்ளிகள்)

08. பிரயோக ஒழுக்கவியல் என்றால் என்ன? என விளக்கி சமகால வைத்திய ஒழுக்க மாறுகைகள் பற்றி வைத்திய ஒழுக்கவியல் சட்டக் கோவைகளை அடிப்படையாக வைத்து ஆராய்க.

(20 புள்ளிகள்)

***

LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY